**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.5**
**OS.NO.56/2018 (C/w.OS.No.57/2019, 66/2019,24/2019)**

**Name** : Ponnurangam
**Father/Husband Name** : Natesan

**Age** : 64

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 11.09.2025**

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**விசாரணை தொடங்கும் நேரம்: 12.40 p.m**

**சாட்சி ஆஜர். மேலும் முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வாதி தரப்பில் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**முதல் விசாரணை தொடர்ச்சி**

ஆதிமூலம் என்பவரை தெரியும். என் அத்தையின் கணவர்.

**குறுக்கு விசாரணை**

நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க சம்மன் வந்ததா என்றால் வரவில்லை. என்னை தனலட்சுமி- 4வது வாதி தான் என் நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார். என் தாத்தா பெயர் ஏகாம்பர நாயக்கர். அவரின் மகன்கள் தான் பாலசுந்தரம் மற்றும் நடேசன். அவரின் வாரிசு சான்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஏகாம்பரத்தின் வாரிசு பாலசுந்தரம் இல்லை என்றால் சரியல்ல.பாலசுந்தரத்தின் வாரிசு சான்று எடுத்து வந்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் உயிலில் என் அப்பா கையெழுத்து இல்லை என்றால் சரிதான். பாலசுந்தரன் மற்றும் நடேசனும் அண்ணன் தம்பிகள் இல்லை என்றால் சரியல்ல. பாலசுந்தரம் என் பெரியப்பா என்று

கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து எந்த சான்றும் எடுத்து வந்து தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பாலசுந்தரத்திற்கு 5 பிள்ளைகள். அவர்கள் பெயர் எனக்கு தெரியாது. அந்த 5 பேரும் உயிருடன் இருக்கிறார்கள். ஒருவர் தான் ஊரில் இருக்கிறார் மற்றவர்கள் வெளியூரில் உள்ளார்கள். உண்மையில் பாலசுந்தரம்எ ன் பெயரியப்பா என்றால் அவரின் பிள்ளைகளின் பெயர்கள் தெரிந்திருக்கும் என்றாலும் நான் பணம் பெற்று கொண்டு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆதிமூலம் உயில் எழுதியதாக சொல்லப்படும் தேதி, மாதம் தெரியாது. வருடம் 1985. ஆதிமூலம் இறந்த தேதி தெரியாது. 1987 ல் இறந்தார். ஆனால் தேதி மாதம் தெரியாது. எனக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் தனலட்சுமி கேட்டுகொண்டதற்கான நீதிமன்றத்தில் பொய்யகா சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. என் சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம்:** 12.50 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI
Digitally signed by G SANTHI
Date: 2025.09.11 10:11:09 +0530

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.